**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 01.11.2025**
**EP. No. 13/2016**
**வழக்கு சாட்சி PW.1– ஜெயக்குமார், த/பெ.ஜானகி ராமன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

7) என் வீட்டிற்கு மேற்குபுறம் 15 இஞ்ச் நிலம் விட்டுதான் நான் காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த சுவற்றை ஒட்டிதான் எதிர்மனுதாரர்களின் காம்பௌண்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல, 1/2 அடி நிலம் விட்டு தான் அவருடைய காம்பௌண்ட் சுவர் அமைந்துள்ளது. அ.வ.எண்.298/2010 என்ற வழக்கிலும், நான் தாக்கல் செய்த வழக்கிலும் 15 இஞ்ச் நிலம் விட்டு காம்பௌண்ட் சுவர் கட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்கண்ட வழக்குகளில் என் வீட்டிற்கு மேற்கு புறம் ஒரு காம்பௌண்ட் சுவர் சுவர் உள்ளதாக தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.298/2010 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் நானும், மனுதாரரும் சமரசமாக பேசி தான் தீர்ப்பு வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

8) இந்த நிறைவேற்று மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையிலும் எதிர்மனுதாரர் 3 அடி காம்பௌண்ட் சுவரை உயர்த்தி கட்டிக்கொள்ளலாம் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் எதிர்மனுதாரருடைய வீட்டிற்கு கிழபுறம் அமைந்துள்ள காம்பௌண்ட் சுவர் என் வீட்டிற்கு மேற்குபுறம் அமைந்துள்ளதால் அதை நாங்கள் பராமரித்து கொள்ளலாம் என்று தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எங்கள் இருவருக்கும் தனித்தனி காம்பௌண்ட் சுவர் இருந்தால் நான் அவருடைய காம்பௌண்ட் சுவரை பராமரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 10 அடி ஆழத்திற்கு குழி தோண்டியதால் என்னுடைய காம்பௌண்ட் சுவர் விழுந்துவிட்டது அதனால் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய 3 அடி காம்பௌண்ட்

சுவற்றை 8 அடியாக உயர்த்தி கட்ட எதிர்மனுதாரர் அனுமதி கேட்டார் நானும் கொடுத்தேன்.

9) என்னுடைய வீட்டிற்கு மேற்குபுறம் அமைந்துள்ள சன்ஷேடானது 15 இஞ்ச் அளவு இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் என்னுடைய வீட்டிற்கு மேற்குபுறம் 9 இஞ்ச் இடைவெளி விட்டு வீடு கட்டியிருப்பதாகவும் அதனை ஒட்டி எதிமனுதாரரின் காம்பௌண்ட் சுவர் உள்ளதாகவும், அந்த 9 இஞ்ச் இடைவெளியில் நான் பைப்லைன் போடுவதற்கு எதிர்மனுதாரர் எந்த தொந்தரவும் செய்யக்கூடாது என்று தான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் காம்பௌண்ட் சுவர் 1ம் எதிர்மனுதாரர் பூமிசெட்டிக்கு பாத்தியப்பட்டது என்றும், அதை நான் பராமரித்து கொள்ளலாம் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த மனுவிலும் எதிர்மனுதாரர் அவருடைய காம்பௌண்ட் சுவரை என்னுடைய வீட்டிற்கு மேற்குபுறம் ஒட்டினார்போல் கட்டிவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

10) இந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் மனு சொத்தை அளந்தபோது என்னுடைய வீட்டிற்கும், எதிர்மனுதாரரின் காம்பௌண்ட் சுவருக்கும் 9–3/4 இஞ்ச் இடைவெளி உள்ளதாக அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளார், ஆனால் அது தவறானது ஆகும். என்னுடைய இந்த மனுவிலும், எனக்கு காம்பௌண்ட் சுவர் உள்ளதாகவும் அதை இடித்து தான் எதிர்மனுதாரர் காம்பௌண்ட் சுவர் கட்டினார் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் சொல்வதுபோல் காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தால் அவருடைய காம்பௌண்ட் சுவரை இடித்துவிட்டு, என்னுடைய காம்பௌண்ட் சுவர் இடித்துவிட்டு அதன் பிறகு தான்ஆக்கிரமிப்பு செய்திருக்க முடியும் என்றால் சரிதான். நான் காம்பௌண்ட் சுவர் இடித்ததாக புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

11) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிலும் காம்பௌண்ட் சுவர் என்னுடையது என்றும், அதை எதிர்மனுதாரர் இடித்துவிட்டு ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லவில்லை

என்றால் சரியல்ல. எனக்கும் என் மனைவிக்கும் 04.05.2016 ல் எதிர்மனுதாரர் சட்ட அறிவிப்பு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சமரச தீர்ப்பில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு மாறாக எதிர்மனுதாரின் காம்பௌண்ட் சுவரிலுள்ள கற்களை பிடிங்கி விட்டதாக அதில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது, ஆனால் நாங்கள் எதுவும் செய்யவில்லை. அந்த அறிவிப்பிற்கு 09.05.2016 ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பிலும் எங்களுக்கு காம்பௌண்ட் சுவர் பாத்தியப்பட்டதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றும், எங்களுடைய இடத்தில் ஆக்கிரமித்து எதிர்மனுதாரர் கட்டியுள்ளதாக தான் தெரிவித்துள்ளோம் என்றால் சரிதான். இந்த நிறைவேற்றுதல் மனுவிலும் சொத்துவிவரத்தில் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டு எந்த அளவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

12) நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தீர்ப்பிற்கு எதிராக எவ்வித ஆக்கிரமிப்பும்இல்லை என்று தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறான அறிக்கையாகும். அ.வ.எண்.298/2010 ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் என் வீட்டிற்கு மேற்குபுறமுள்ள காம்பௌண்ட் சுவர் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதற்கு இடைப்பட்ட 9 இஞ்ச் இடத்தில் நான் பைப்லைன் போட்டுக்கொள்ளலாம் என்றும் எதிர்மனுதாருக்கு நான் தொந்தரவு செய்யக்கூடாது என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் நான் கொண்டு செல்லும் பைப்லைனால் எதிர்மனுதாரரின் காம்பௌண்ட் சுவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தீர்ப்பில் சொல்லியுள்ள 9 இஞ்சக்கு மேல் இடம் விட்டு தான் காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளார் என்றும், அந்த தீர்ப்பில் குறிப்பிட்டவாறுதான் 8 அடிக்கு உயர்த்தி கட்டியுள்ளார் என்றால் சரியல்ல.

13) நான் என்னுடைய வீட்டின் சன்ஷேடை நீட்டி கட்டியுள்ளதால் தான் அந்த இடத்தில் காம்பௌண்ட் சுவரை 8 அடியாக உயர்த்த முடியாமல் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தீர்ப்பை மீறி எதுவும் செய்யவில்லை என்றும், நான் தான் அவருடைய காம்பௌண்ட் சுவரை என்னுடையது என்று தீர்ப்பிற்கு மாறாக சொல்லி

வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.